002736

AL/2023(2024)/49/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

| | | |
|---|---|---|
| ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය I<br>கிறிஸ்தவ நாகரிகம் I<br>Christian Civilization I | 49 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>Two hours |

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில்** புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** எகிப்திலே பிரமிட்டுகள் கட்டப்பட்டமைக்கான காரணமாவது
(1) எகிப்தியர்களின் அழகியல் திறமை ஆகும்.
(2) மரணத்தின் பின் வாழ்வு உண்டு என்கிற நம்பிக்கை ஆகும்.
(3) எகிப்தியர்களின் கட்டடக்கலையின் ஆற்றலை காண்பிப்பதற்காகும்.
(4) ஏனைய நாடுகளைப் போலச் செய்வதற்காகும்.
(5) அவை பொக்கிஷங்களைப் பாதுகாக்கப் பொருத்தமான இடங்களாகக் காணப்பட்டமையினால் ஆகும்.

**2.** நாகரிகம் என்றால் என்ன?
(1) அகவயமாகவும் புறவயமாகவும் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல் ஆகும்.
(2) ஒரு தேசத்தின் வாழ்க்கை முறையினை இன்னொரு தேசத்தின் வாழ்க்கை முறையிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் அறிகுறி ஆகும்.
(3) அழகியற் திறன்களின் தொகுப்பாகும்.
(4) காலத்திற்கு ஏற்றாற்போல் தழுவுதல் ஆகும்.
(5) பாரம்பரிய மரபுகளைப் பாதுகாப்பது ஆகும்.

**3.** மூன்று பிரதான கிரேக்க தத்துவவியலாளர்கள்
(1) சோக்கிரட்டீஸ், சிசேரோ, வேர்ஜில்
(2) பிளேட்டோ, வேர்ஜில், அரிஸ்டோட்டில்
(3) சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில்
(4) அரிஸ்டோட்டில், அலெக்ஸ்சாண்டர், சிசேரோ
(5) பிளேட்டோ, அரிஸ்டோட்டில், வேர்ஜில்

**4.** 'ஊர்' எனும் நகரம் காணப்பட்ட நாடு.
(1) கிறீஸ் (2) உரோமை (3) பாரசீகம் (4) பபிலோனியா (5) இந்தியா

**5.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - ஆரம்பத்தில் கிறிஸ்தவம் யூதத்தின் கிளையாகக் கருதப்பட்டது.
B - கிறிஸ்தவ நாகரிகத்தின் மீது யூத நாகரிகத்தின் தாக்கம் இருந்தது.
C - கி.பி. முதலாம் நூற்றண்டில் கிறிஸ்தவர்கள் அசீரியர்களின் ஆட்சியின் கீழ் இருந்தார்கள்.
D - கிறிஸ்தவ நாகரிகத்தின் மீது கிரேக்க நாகரிகத்தின் தாக்கம் இருந்தது.
E - கி.பி. முதலாம் இரண்டாம் நூற்றண்டுகளில் கிறிஸ்தவம் யூதேயாவுக்குள் மட்டுப்படுத்தப்பட்டது.
இவற்றுள் கிறிஸ்தவம் குறித்த சரியான கூற்றுகள் எவை?
(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) C, D, E

**6.** பின்வருவனவற்றுள் கலிலேய நகரங்கள்
(1) கப்பர்நாகும், திபேரியா, ஹெப்ரோன் (2) கப்பர்நாகும், திபேரியா, ஜெரிக்கோ
(3) கப்பர்நாகும், திபேரியா, பெத்சாய்தா (4) ஹெப்ரோன், ஜெரிக்கோ, பெத்சாய்தா
(5) திபேரியா, ஜெரிக்கோ, பெத்சாய்தா

0202000188112736

[பக். 2 ஐப் பார்க்க

7. யாக்கோபின் கிணறு அமைந்துள்ள பிரதேசம் எது?
(1) யூதேயா (2) கலிலேயா (3) நெகேப் (4) காசா (5) சமாரியா

8. இஸ்ரலேயரால் முதலில் கைப்பற்றப்பட்ட நகரம் எது?
(1) ஆயி (2) காசா (3) அஸ்கெலோன் (4) ஜெரிக்கோ (5) அம்மோன்

9. எரோபவாம் மன்னன் தங்கக் கன்றுக்குட்டிகளை எந்த நகரங்களில் வைத்தான்?
(1) பெத்தேல், தாண் (2) பெத்தேல், எருசலேம் (3) தாண், பெர்சியா
(4) தாண், ஹெப்ரோன் (5) அஸ்கெலோன், காசா

10. கிதியோன் இஸ்ரயேல் மக்களை விடுவித்தது
(1) பெனிசியர்களிடமிருந்தாகும். (2) எகிப்தியர்களிடமிருந்தாகும்.
(3) ஹிட்டைட்ஸ்களிடமிருந்தாகும். (4) மிதியானியர்களிடமிருந்தாகும்.
(5) சிரியர்களிடமிருந்தாகும்.

11. ஏனைய நாடுகளுடன் வியாபாரத் தொடர்பினை ஏற்படுத்திய முதல் இஸ்ரயேல் அரசன்
(1) சவுல் (2) தாவீது (3) சாலமோன் (4) ரெகபோவாம் (5) எரோபவாம்

12. யூதர்களின் நன்மதிப்பினைப் பெற ஏரோது என்ன செய்தான்?
(1) வரிகளைக் குறைத்தான்.
(2) பொதுமக்களுக்காக வைத்தியசாலைகளை அமைத்தான்.
(3) ஏழைகளுக்கு நன்கொடைகள் வழங்கினான்.
(4) யூத அடிமைகளை விடுவித்தான்.
(5) எருசலேம் ஆலயத்தை மீளவும் கட்டினான்.

13. வரிதண்டுவோர் இகழப்பட்டமைக்கான காரணங்கள்
(1) அந்நியருக்காக வரி வசூலித்தமை, பாவமான நடத்தை, நிலத்தை அபகரித்தல்
(2) அந்நியருக்காக வரி வசூலித்தமை, பாவமான நடத்தை, மக்களை அடிமையாக்குதல்
(3) அந்நியருக்காக வரி வசூலித்தமை, பாவமான நடத்தை, வஞ்சக முறையில் வரி வசூலித்தல்
(4) பாவமான நடத்தை, நிலத்தை அபகரித்தல், மக்களை அடிமையாக்குதல்
(5) மக்களை அடிமையாக்குதல், நிலத்தை அபகரித்தல், பெண்களுக்கு எதிரான வன்முறை

14. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - உரோமையருடன் இணைந்து செயற்பட்டனர்
B - ஆன்மாவின் அழியாமையை ஏற்றுக்கொண்டனர்
C - தலைமைச் சங்கத்தில் உறுப்பினர்களாக விளங்கினர்
D - வானதூதர்களின் இருப்பினை ஏற்றுக்கொண்டனர்
E - கிரேக்க, உரோமை பண்பாடுகளை மதித்தனர்
இவற்றுள் சதுசேயர்கள் குறித்த சரியான கூற்றுகள்
(1) A, B, C (2) A, B, D (3) A, C, D (4) A, C, E (5) A, D, E

15. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - இது ஹனுக்கா என்றும் அழைக்கப்பட்டது
B - செப்டெம்பர் - அக்டோபர் மாதங்களில் கொண்டாடப்பட்டது
C - உண்ணா நோன்பின் நாளாகும்
D - நன்றி செலுத்துதலின் விழாவாகும்
E - வருடத்திற்கு ஒருமுறை கொண்டாடப்படும்
இவற்றுள் யோம் கிப்பூர் குறித்த சரியான கூற்றுகள்
(1) A, B, C (2) A, B, D (3) A, D, E (4) B, C, D (5) B, C, E

16. யூத வீடுகள் குறித்த **தவறான** கருத்து யாது?
(1) யூதர்கள் வளர்ச்சியடைந்த கட்டிடக் கலையினைக் கொண்டிருந்தார்கள்.
(2) ஏழைகள் மண்ணால் எழுப்பப்பட்ட வீடுகளில் வாழ்ந்தார்கள்.
(3) செல்வந்தர்கள் சுடப்பட்ட செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகளில் வாழ்ந்தார்கள்.
(4) பொதுவாக வீட்டிற்கு ஒரு கதவு மட்டும் காணப்பட்டது.
(5) பொதுவாக வீடுகள் தெருக்களை நோக்கி அமைந்திருந்தன.

[பக். 3 ஐப் பார்க்க



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**17.** பின்வரும் கூற்றுகளில் சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) இயேசு யூத மரபுகளை எதிர்த்தார்.
(2) சமாரியர்கள் கெரிசிம் மலையில் தொழுதார்கள்.
(3) இயேசு ஒரு செலுத்தியர்.
(4) இயேசு தமது முதலாவது மறையுரையினை கப்பர்நாகுமில் ஆற்றினார்.
(5) உரோமையர் மட்டுமே வரிதண்டுவோர் ஆவர்.

002736

**18.** "ஆண்டவரின் ஆவி என்மேலே ஏனெனில் ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க அவர் என்னை அபிஷேகம் செய்துள்ளார்." என்று இயேசு கூறியது
(1) கானாவின் திருமண வீட்டில் ஆகும். (2) அப்பங்களைப் பலுகச்செய்தபோது ஆகும்.
(3) கூடாரங்களின் விழாவின்போது ஆகும். (4) அவரது தோற்றமாற்றத்தின்போது ஆகும்.
(5) நசரேத்து தொழுகைக் கூடத்தில் ஆகும்.

**19.**

| | | | | |
|---|---|---|---|---|
| A - இறந்த இளைஞனை உயிர்ப்பித்தது | B - எட்டுப்பேறுகள் | C - மறைவாய் உள்ள புதையலின் உவமை | D - அசுத்த ஆவி பீடித்தவருக்கு நலமளித்தல் | E - "அஞ்சவேண்டாம் நான்தான்" |
| F - ஹெப்ரோன் | G - நயீன் | H - கலிலேயக் கடலில் புயலடித்தபோது | I - இறையரசு பற்றிய உவமை | J - மலைப்பொழிவு |

மேல்வரும் அட்டவணையில் குறிப்படப்பட்டுள்ள சரியான இணைப்பு யாது?
(1) A யும் G யும் (2) B யும் I யும் (3) C யும் G யும் (4) D யும் F யும் (5) E யும் J யும்

**20.** பின்வரும் கூற்றுகளில் சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) இயேசு சீனாய் மலையில் தோற்றம் மாறினார்.
(2) இயேசுவின் துன்பத்திற்கும் மரணத்திற்கும் அவரது உயிர்ப்பு பொருள் தருகின்றது.
(3) பரிசேயர்கள் உயிர்ப்பில் நம்பிக்கை கொள்ளவில்லை.
(4) இயேசு தமது தெய்வீகத்தை நிரூபிக்க புதுமைகள் செய்தார்.
(5) இயேசு பெத்தானியாவில் தண்ணீரை இரசமாக மாற்றினார்.

**21.** 'அகாப்பே' என்பதன் பொருள்
(1) தொடக்க கிறிஸ்தவர்களின் சமூக வாழ்க்கை
(2) தொடக்க கிறிஸ்தவர்களின் அன்பின் விருந்து
(3) கிறிஸ்துவுக்கு சாட்சியம் பகர்வது
(4) தினமும் மூன்று தடவைகள் ஒன்றாக செபிப்பது
(5) சாபத் நாளில் இறைபுகழ் பாடுவது

**22.** எருசலேம் சங்கம் கூட்டப்பட்டமைக்கான காரணம்
(1) திருச்சபையின் மறைபரப்பு பணியை ஒழுங்கமைப்புச் செய்வதற்காகும்.
(2) எருசலேம் திருச்சபையில் ஏற்பட்ட குழப்பத்தைத் தீர்த்துக்கொள்வதற்காகும்.
(3) புனித பவுலின் மறைபரப்புப் பயணங்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்காகும்.
(4) கிறிஸ்தவத்தின் சுதந்திரத்தை உறுதி செய்வதற்காகும்.
(5) மோசேயின் சட்டமாகிய விருத்தசேதனத்தை ஏற்றுக்கொள்வது குறித்துக் கலந்துரையாடுவதற்காகும்.

**23.** அறியாத தெய்வத்திற்குரிய பீடம் குறித்து பவுல் எங்கு உரையாற்றினார்?
(1) கொரிந்து (2) பிலிப்பி (3) கலாத்தியா (4) எதேன்ஸ் (5) எபேசு

**24.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - இறைவாக்குரைத்தல் பரவசப்பேச்சினை விட மேலானது
B - பரவசப்பேச்சுப் பேசுவதை புனித பவுல் தடைசெய்தார்
C - இறைவாக்குரைப்பது திருச்சபையின் வளர்ச்சிக்கு உதவுகின்றது
D - பரவசப்பேச்சு பேசுவது திருச்சபையின் வளர்ச்சிக்கு உதவுகின்றது
E - இறைவாக்குரைத்தல் மக்களுடன் பேசுவதாகும்
இவற்றுள் இறைவாக்குரைத்தல், பரவசப்பேச்சு பேசுவது என்பன பற்றிய புனித பவுலின் கூற்றுகள் எவை?
(1) A, B, C (2) A, B, D (3) A, C, E (4) B, C, D (5) C, D, E

0102000018811 2736

[பக். 4 ஐப் பார்க்க

25. பேரரசன் வலேரியன் கிறிஸ்தவர்கள் மீது விதித்த இரண்டு ஆணைகள் எவை?
(1) கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதும், போலித் தெய்வங்களுக்கு பலியிட குருக்களை கட்டாயப்படுத்துவதும்
(2) கிறிஸ்தவர்களை எரிப்பதும், அவர்களை காட்டு விலங்குகளுக்கு இரையாக்குவதும்
(3) பேரரசனை வழிபடுவதும், உரோமைத் தெய்வங்களை வழிபடுதலும்
(4) ஆயர்களைக் கைதுசெய்வதும், குருக்களைக் கொலை செய்வதும்
(5) குருக்களை நாடு கடத்துவதும், புனித நூல்களை எரித்தலும்

26. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - சமய சுதந்திரம்
B - சிலுவை மரணத்தை இல்லாதொழித்தல்
C - கிறிஸ்தவத்தை அரச மதமாகப் பிரகடனம் செய்தல்
D - விருத்தசேதனத்தைத் தடைசெய்தல்
E - குருக்களுக்கு வரி விலக்களித்தல்
இவற்றுள் கி.பி. 313 இல் வெளியிடப்பட்ட மிலான் சாசனம் குறித்த சரியான கூற்றுகள் எவை?
(1) A, B, C (2) A, B, E (3) A, C, D (4) A, C, E (5) A, D, E

27. 'கடவுளைச் சுமப்பவர் (Theophorus)' என்று அழைக்கப்படுகின்ற கிறிஸ்தவ மறைசாட்சி
(1) உரோமை புனித கிளமெண்ட் (2) எருசலேம் புனித ஸ்தேவான்
(3) அந்தியோக்கு புனித இஞ்ஞாசியார் (4) மறைசாட்சி புனித ஜஸ்ரின்
(5) லியோன் புனித இரனேயுஸ்

28. "வார்த்தை கடவுளிலும் கீழானது" என்று உரைத்த தப்பறைப்போதனைக் குழுவினர் யார்?
(1) நெஸ்தோரியர்கள் (2) பெலாஜியர்கள்
(3) இயுக்திகேயர்கள் (4) மணிக்கேயர்கள்
(5) ஆரியர்கள்

29. இங்கிலாந்து நாட்டின் மறைத்தூது திருத்தூதர் யார்?
(1) திருத்தந்தை பெரிய கிரகோரியார் (2) புனித கொலம்பா
(3) கன்ரபெரி புனித அகுஸ்தீனார் (4) புனித பொனிபாஸ்
(5) புனித பற்றிக்

30. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - சிலுவை யுத்தத்தால் ஏற்பட்ட பாதிப்புகள்
B - மாட்டீன் லூத்தரின் சீர்திருத்தம்
C - மேலைத்தேய, கீழைத்தேய பிளவு
D - திருச்சபை விடயங்களில் உரோமைப் பேரரசின் தலையீடு
E - திருச்சபைத் தலைவர்களின் அறநெறி நடத்தையில் ஏற்பட்ட சீர்கேடு
இவற்றுள் திருச்சபையின் இருண்ட யுகத்திற்கு இட்டுச்சென்ற காரணிகளை விளக்கும் சரியான கூற்றுகள் எவை?
(1) A, B, C (2) A, B, D (3) A, C, D (4) A, C, E (5) A, D, E

31. சிலுவை யுத்தங்கள் பற்றிய சரியான கூற்று யாது?
(1) புனித நாட்டினைக் கைப்பற்றுவதில் கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையிலான யுத்தங்களாகும்.
(2) பேரரசனின் கரங்களிலிருந்து அடிமைகளை மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்ட யுத்தங்களாகும்.
(3) கீழைத்தேச கிறிஸ்தவ சமூகங்களுக்கிடையிலான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளாகும்.
(4) கீழைத்தேசத்தில் அரசியல் அதிகாரங்களை மீளக்கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட பயணங்களாகும்.
(5) இஸ்லாமியரை கிறிஸ்தவத்திற்கு மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாகும்.

32. இரவலர் சபைகளாவன
(1) வல்தேசியன், பிரான்சிஸ்கன், வின்சென்சியன்
(2) பிரான்சிஸ்கன், டொமினிக்கன், கார்மேல் சபையினர்
(3) டொமினிக்கன், வல்தேசியன், வின்சென்சியன்
(4) வல்தேசியன், டொமினிக்கன், பிரான்சிஸ்கன்
(5) டொமினிக்கன், இயேசு சபையினர், பிரான்சிஸ்கன்

[பக். 5 ஐப் பார்க்க



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**33.** ஐரோப்பிய கோத்திரங்களை கிறிஸ்தவத்துக்கு மனமாற்றிய பிரதான துறவற சபையினர்
(1) பிரான்சிஸ்கன் (2) பெனடிக்டன் (3) சிஷ்ரேசியன்
(4) டொமினிக்கன் (5) இயேசு சபையினர்

**34.** திருத்தந்தை பிரான்ஸ் நாட்டின் அவிஞ்ஞாவில் இருந்தமைக்கான பிரதான காரணம் யாது?
(1) உரோமையில் கிறிஸ்தவர்களின் ஆன்மீகத்தில் காணப்பட்ட சீர்கேடுகள்
(2) பிரான்ஸில் இத்தாலியை விட அதிகளவிலான கத்தோலிக்கர்கள் காணப்பட்டமை
(3) அக்காலத்தில் அதிகளவான திருத்தந்தையர்கள் பிரான்ஸிலிருந்து தெரிவானவர்கள்
(4) உரோமையில் காணப்பட்ட பாதுகாப்பின்மை காரணமாக
(5) உரோமையில் வாழ்க்கைச் செலவு அதிகமாக இருத்தல்

**35.** தப்பறைப் போதனைகள் பங்களிப்புச் **செய்யாமையானது**
(1) திருவிவிலித்தை வாசிப்பதற்குத் தூண்டியமை
(2) பொதுச் சங்கங்களைக் கூட்டியமை
(3) கோட்பாடுகளை உண்டாக்கியமை
(4) இறையியலை ஆழமாகக் கற்றமை
(5) திருச்சபை ஒன்றிப்பினை ஊக்குவித்தமை

**36.** விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் வழியே திருவிவிலியத்தைக் கற்று அதனை ஆய்வுசெய்த விஞ்ஞானி
(1) அலெக்சாண்டர் பிளெமிங் (2) அல்பேரட் அயின்ஸ்டைன்
(3) அலெக்சாண்டர் கிரகெம்பெல் (4) தியாடர் டீ சர்டேன்
(5) சேர் ஐசக் நியூட்டன்

**37.** சிலுவை யோவானால் எழுதப்பட்ட நூல்கள்
(1) ஆன்மாவின் இருள் அடர் இரவு, கார்மேல் மலையேற்றம், ஆன்மீகக் கீதம்
(2) கார்மேல் மலையேற்றம், ஆன்மீகக் கீதம், யாத்திரிகனின் பயணம்
(3) ஆன்மாவின் இருள் அடர் இரவு, தெய்வீக அன்பின் உயிருள்ள சுவாலை, இழந்த இன்பவனம்
(4) உள்மன அரண்மனை, ஆன்மீகக் கீதம், தெய்வீக அன்பின் உயிருள்ள சுவாலை
(5) இழந்த இன்பவனம், ஆன்மீகக் கீதம், தெய்வீக அன்பின் உயிருள்ள சுவாலை

**38.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - கி.பி. 800 இல் கதீற்றல் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.
B - மன்னன் சாலமென் கதீற்றலுக்கு அருகில் பாடசாலைகளை ஆரம்பிக்க ஆயர்களுக்கு ஆணையிட்டான்.
C - கதீற்றல் பாடசாலைகளில் ஏபிரேய, கிரேக்க மொழிகள் கற்பிக்கப்பட்டன.
D - கதீற்றல் பாடசாலைகளில் ஏழைகளின் பிள்ளைகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.
E - திருத்தந்தையர்கள் கதீற்றல் பாடசாலைகளுக்கு தங்களது ஆதரவினை நல்கினர்.
இவற்றுள் கதீற்றல் பாடசாலைகள் பற்றிய சரியான கூற்றுகள் எவை?
(1) A, B, C (2) A, B, E (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

**39.** கத்தோலிக்க இலத்தீன் திருச்சபையில் ஆதிக்கம் செலுத்தும் பாரம்பரிய திருச்சபை இசை
(1) பொலிபொனி இசை (2) ஓரத்தோரியன் இசை
(3) கிரகோரியன் இசை (4) பறோக் இசை
(5) நற்செய்தி இசை

- பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி **40** தொடக்கம் **42** வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| A - திருத்தந்தை 4 ஆம் அலெக்சாண்டர் | B - கி.பி. 1520 இல் பல்கலைக்கழக அச்சகம் ஆரம்பிக்கப்பட்டது | C - கார்த்தேஜ் பல்கலைக்கழகம் | D - நேப்பிள்ஸ் பல்கலைக்கழகம் |
| E - ஓரிறைக் கொள்கை | F - 3 ஆம் ஹென்றி மன்னன் | G - ஸ்கொலாஸ்டிசம் (குருகுலவாதம்) | H - 3 ஆம் பேர்டினன்ட் மன்னன் |

**40.** சலமன்கா பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய சோடி
(1) A, E (2) A, H (3) B, G (4) B, H (5) D, H

**41.** கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய சோடி
(1) A, E (2) A, H (3) B, F (4) B, H (5) D, H

[பக். 6 ஐப் பார்க்க

42. புனித தோமஸ் அக்குவினாசுடன் தொடர்புடைய சோடி
(1) A, E (2) A, H (3) B, F (4) D, G (5) D, H

43. நெஸ்தோரியர்களால் கிறிஸ்தவம் எடுத்துச் செல்லப்பட்ட நாடுகளாவன
(1) இந்தியா, இலங்கை, மொங்கோலியா, சீனா
(2) இந்தியா, ஜப்பான், இலங்கை, தாய்லாந்து
(3) மாலைதீவு, மொங்கோலியா, பர்மா, இலங்கை
(4) சீனா, இந்தியா, வியட்நாம், தாய்வான்
(5) பிலப்பைன்ஸ், இந்தியா, சீனா, இலங்கை

44. 'கூணன் சிலுவை ஆணை' கிளர்ச்சி எங்கு நடைபெற்றது?
(1) கிரங்கனூர் (2) கொச்சின் (3) மட்டன்சேரி (4) மலபார் (5) கோட்டயம்

45. ஜப்பானுக்கு சென்ற முதல் மறைபரப்பாளர்கள் யார்?
(1) பிரான்சிஸ்கு சவேரியார், லொயோலா இஞ்ஞாசியார், டி நொபிலி
(2) பிரான்சிஸ்கு சவேரியார், கொஸ்மே தெ ரொறெஸ், ஜோன் பேர்னான்டஸ்
(3) டி நொபிலி, மத்தேயு ரிச்சி, கொஸ்மே தெ ரொறெஸ்
(4) பிரான்சிஸ்கு சவேரியார், டி நொபிலி, ரொயார் டி சார்டேன்
(5) கொஸ்மே தெ ரொறெஸ், ஜோன் பேர்னான்டஸ், மத்தேயு ரிச்சி

46. புனித ஜோசப்வாஸ் புகழ்பெறக் காரணமாய் அமைபவை
(1) பற்றற்ற வாழ்க்கை, மரியாதையான நடத்தை, நீண்ட மறையுரைகள்
(2) பற்றற்ற வாழ்க்கை, உபவாசம், தப்பறைகளைக் கண்டித்தல்
(3) மரியாதையான நடத்தை, உபவாசம், ஆலயங்களைக் கட்டுதல்
(4) பற்றற்ற வாழ்க்கை, மரியாதையான நடத்தை, உபவாசம்
(5) நீண்ட மறையுரைகள், உபவாசம், தப்பறைகளைக் கண்டித்தல்

47. 'சமூக ஒழுங்கமைப்பு' எனும் சுற்றுமடலை எழுதிய திருத்தந்தை
(1) திருத்தந்தை 13 ஆம் லீயோ (2) திருத்தந்தை 11 ஆம் பியு (பயஸ்)
(3) திருத்தந்தை 23 ஆம் யோவான் (4) திருத்தந்தை 2 ஆம் ஜோன் பவுல்
(5) திருத்தந்தை பிரான்சிஸ்

48. மானிட சமுதாயம் எதிர்கொள்ளும் சிக்கல்களைக் குறித்து கலந்துரையாடும் இரண்டாம் வத்திக்கான் ஏடு
(1) திருச்சபை (Lumen Gentium)
(2) இறைவெளிப்பாடு (Dei Verbum)
(3) இன்றைய உலகில் திருச்சபை (Gaudium et spes)
(4) கிறிஸ்தவமல்லா மறைகளுடனான திருச்சபைக்கான தொடர்பு (Nostra Aetate)
(5) கிறிஸ்தவ ஒன்றிப்பு (Ut Unum Sunt)

49. 'அமைதி ஊடக எழுத்தியலை' ஆதரித்து ஊக்கமளிக்கும் கிறிஸ்தவ நிறுவனம் எது?
(1) உலக இவாஞ்சலிக்கல் கூட்டமைப்பு (2) நம்பிக்கை ஒழுங்குக்குமான ஆணையம்
(3) சர்வதேச மிசனரி சங்கம் (4) கிறிஸ்தவ கல்விக்கான உலகச்சங்கம்
(5) உலக கிறிஸ்தவ சம்மேளனம்

50. பல்சமய உரையாடல் குறித்து வெஸ்லி அரியராஜாவால் எழுதப்பட்ட நூல் எது?
(1) இந்துக்களும் கிறிஸ்தவர்களும்
(2) கிறிஸ்தமல்லா மறைகளுடனான உறவு
(3) கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும்
(4) கிறிஸ்தவ ஒன்றிப்பு
(5) பல்சமய உரையாடல் குறித்த கலந்துரையாடல்

* * *

0000658

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය II
கிறிஸ்தவ நாகரிகம் II
Christian Civilization II

**49 T II**

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) யூதேயாவின் **நான்கு** நகரங்களைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

(ii) இஸ்ரயேலில் நீதித் தலைவர்களின் செயற்பாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) சவுல் மன்னனின் ஆட்சியினை விபரிக்குக. (6 புள்ளிகள்)

(iv) யூதப் பண்பாட்டிலும் சமூகத்திலும் கிரேக்க நாகரீகத்தின் தாக்கத்தினை விளக்குக. (8 புள்ளிகள்)

**2.** (i) 'கிறிஸ்துநாதர் அனுசாரத்தில்' காணப்படும் படிப்பினைகள் **இரண்டினை** எழுதுக. (2 புள்ளிகள்)

(ii) அலெக்சாந்திரியக் கல்லூரியின் பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) திருவிவிலியம் இலத்தீன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டமைக்கான காரணங்களை விளக்குக. (6 புள்ளிகள்)

(iv) கிறிஸ்தவ வழிபாட்டில் உரோமை சமயத்தின் செல்வாக்கினை விபரிக்குக. (8 புள்ளிகள்)

**3.** (i) போர்த்துக்கேயர் ஆட்சியின்போது இலங்கையில் காணப்பட்ட அரசுகள் **இரண்டினைப்** பெயரிடுக. (2 புள்ளிகள்)

(ii) போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் இயேசு சபையினரால் ஆற்றப்பட்ட பணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) ஒல்லாந்தரின் ஆட்சி இலங்கை சமூகத்தின்மீது செலுத்திய தாக்கத்தினை விபரிக்குக. (6 புள்ளிகள்)

(iv) மனித உரிமைகள், மற்றும் சமூகநீதியினை முன்னெடுப்பதில் இலங்கையில் கிறிஸ்தவ திருச்சபைகளின் பங்களிப்பினை விளக்குக. (8 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki

## பகுதி II

**4.** (i) தலைமைத்துவம் குறித்த கிறிஸ்துவின் படிப்பினைகளை விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) மக்களினதும், நாட்டினதும் நல்வாழ்விற்கு அத்தியாவசியமான நல்ல, அர்ப்பணிப்பு மிக்கதொரு தலைமைத்துவத்தின் தேவையை விளக்குக. (10 புள்ளிகள்)

**5.** (i) தூய ஆவி பற்றிய புனித பவுலின் படிப்பினைகளை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) தூய ஆவியால் தூண்டப்பட்டு திருச்சபை கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு எவ்வாறு பணியாற்றலாம் என்பதைக் குறித்து கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

**6.** (i) தொடக்கக் கிறிஸ்தவர்களின் வாழ்வு மற்றும் சமய நடைமுறைகள் குறித்து விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) தொடக்கக் கிறிஸ்தவர்களின் வாழ்வும் சமய நடைமுறைகளும் எவ்வாறு இன்றைய கிறிஸ்தவ சமூகத்திற்கு தூண்டுதலாக அமையலாம் என்பது குறித்து கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

**7.** (i) 16 ஆம் நூற்றாண்டில் திருச்சபையின் புதுப்பித்தலுக்கு கார்மேல் துறவற சபையினர் ஆற்றிய பங்களிப்பினை விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) கிறிஸ்தவ சமூகங்களின் ஆன்மீகப் புதுப்பித்தலுக்கு பொதுநிலை அமைப்புக்கள் வழங்கக்கூடிய சாத்தியமான செயற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

**8.** (i) சமயங்களுக்கிடையேயான உரையாடலை வளர்ப்பதில் உலகக் கிறிஸ்தவ மாமன்றத்தின் பரிந்துரைகள் குறித்துக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

(ii) கிறிஸ்தவர்கள் மற்றும் ஏனைய சமயத்தவர்கள் மத்தியில் நல்லுறவினை ஊக்குவிப்பதில் திருச்சபைகள் மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகளை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

* * *


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

LOL
Book Store

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

# 25% OFF ALL BOOKS

Including Exercise Books, CR Books, and B5 Books




ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්

**ORDER BOOKS FROM LOL BOOKS STORE**

0372060110 **WWW.LOL.LK**

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**



ORDER GCE A/L SHORT NOTES, MODEL, REVISION BOOKS & PAST PAPERS IN SINHALA, ENGLISH & TAMIL MEDIUM
LOL BOOK STORE
CASH ON DELIVERY AND KOKO PAYMENT AVAILABLE
WHATSAPP - 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls WITH LOL BOOK STORE!